ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

බෞද්ධ ශිෂ්ටාචාරය I
பௌத்த நாகரிகம் I
Buddhist Civilization I

45 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.**

**1.** இந்திய சமூகத்தில் சாதிமுறைமையை உறுதிப்படுத்துவதற்கு பிராமணர்களால் முன்வைக்கப்பட்ட முக்கிய சமய கற்பித்தல்
(1) வர்ணதர்ம கோட்பாடு (2) சுவதர்ம கோட்பாடு (3) ஆசிரமதர்ம கோட்பாடு
(4) ஆபத்தர்ம கோட்பாடு (5) யாக கோட்பாடு

**2.** வானப்பிரஸ்த ஆச்சிரமத்தில் செய்யப்பட வேண்டிய முக்கிய கடமை
(1) வேதம் கற்றல்
(2) புலன் இன்பத்தில் ஈடுபடல்
(3) காட்டில் துறவினைப் பயிற்சி செய்தல்
(4) யாகங்கள் செய்தல்
(5) நாடோடி வாழ்க்கை வாழுதல்

**3.** பின்வரும் கூற்றுகளில் புத்தர் காலத்தில் இந்தியப் பெண்கள் தொடர்பிலான பிராமண கற்பித்தல்களுக்குரிய மிகச் சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.
(1) கணவன் இறந்த பின்னர் மனைவி சதிபூஜை நடாத்துதல் கட்டாயமானதாகும்.
(2) பெண்கள் கணவனுடன் சேர்ந்து மாத்திரமே சமய நடவடிக்கைகளில் பங்குபற்ற முடியும்.
(3) வாழும்காலம் வரை ஆணாதிக்கத்தின் கீழேயே வாழுதல் வேண்டும்.
(4) பெண்களுக்குப் போதுமான அளவு பொருளாதார சுதந்திரம் இருந்தது.
(5) திருமணத்தின் பின்னர் ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றுக் கொள்ளுதல் கட்டாயமானதாகும்.

**4.** புத்தர் கால சிரமண மரபில் நிலவிய தனித்துவமான சில பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றில் ஆஜீவக மரபின் தனித்துவத்தை அதிகம் வலியுறுத்தும் விடயத்தைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) மேலான அகிம்சாவாதியாதல்
(2) தலைப்பாகையைத் தலையில் கொண்டிருத்தல்
(3) மயிரினால் தயாரிக்கப்பட்ட கம்பளியை அணிந்திருத்தல்
(4) ஒரு சால்வையை மாத்திரம் அணிந்திருத்தல்
(5) கையில் தண்டு ஒன்றை வைத்திருத்தல்

**5.** நிலம், நீர், தீ, காற்று, சுகம், துக்கம், உயிர் (பதவி, ஆபோ, தேஜோ, வாயோ, சுக, துக்க, ஜீவ) என நிரந்தரமான முறிவுபடாத ஏழு சடப்பொருள்கள் உள்ளன என்று அறிமுகப்படுத்தும் இலக்கியக் கோட்பாட்டை முன்வைத்த புத்தர் காலத்து இந்திய அறிஞர் யார்?
(1) மக்கலி கோசால (2) பகுட கச்சாயன (3) அஜித கேசகம்பலி
(4) பூரண கஸ்சப (5) நிகண்டநாதபுத்த

[பக். 2 ஐப் பார்க்க

6. புத்தர் கால இந்தியாவில் நடைமுறையிலிருந்த அரச நிர்வாகக் கொள்கைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
   A - தீர்மானங்களை மேற்கொள்ளும் நிறைவேற்று அதிகாரம் அரசனிடம் இருந்தது.
   B - அரச நிர்வாகம் பிரதிநிதித்துவ அமைச்சர் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.
   C - சனநாயக அடிப்படையில் புதிய சட்டங்கள் விதிக்கப்பட்டன.
   D - கருத்து முரண்பாடான பிரச்சினைகளின்போதும் ஏனையோரின் கருத்துக்களை ஆலோசிக்காது தீர்மானங்கள் மேற்கொள்ளல் இடம்பெற்றது.
   E - அண்மையிலுள்ள அரசுகளைக் கைப்பற்றுதல் பிரதான கொள்கையாக இருந்தது.

   மேற்குறிப்பிட்ட கூற்றுகளில் கணதந்திர ஆட்சிக்கு உரிய அரச நிர்வாகக் கொள்கைகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.

   (1) A, B (2) A, C (3) B, C (4) C, E (5) D, E

7. பிண்டோல பாரத்வாஜ தேரரின் போதனையைக் கேட்டு மும்மணிகளிடம் சரணடைந்த புத்தர் காலத்து இந்திய ஆட்சியாளரும் அவரது இராச்சியமும் உள்ளடங்கிய விடையைத் தெரிவுசெய்க.
   (1) பிம்பிசார மன்னன் - மகத இராச்சியம்
   (2) கோசல மன்னன் - கோசல இராச்சியம்
   (3) உதேன மன்னன் - வத்ச இராச்சியம்
   (4) சண்டபஜ்ஜோத மன்னன் - அவந்தி இராச்சியம்
   (5) அஜாசத் மன்னன் - மகத இராச்சியம்

8. புத்தர் காலத்து இந்திய சமூகத்தின் நகரமயமாக்கலின் விளைவு **அல்லாத** விடயம் உள்ளடங்கிய விடையைத் தெரிவுசெய்க.
   (1) மதுபானக் கடைகளும் விலைமாதர் தொழிலும் தோன்றுதல்
   (2) புதிய வர்த்தக சமூகம் தோன்றுதல்
   (3) வர்த்தக நகரங்கள் உருவாகுதல்
   (4) யுத்த முரண்பாடுகள் அதிகரித்தல்
   (5) நகரை அண்மித்த சனத்தொகை வளர்ச்சி வரையறுக்குட்படுதல்

9. சிவுசஸ் சிய நணின்
   தன தன்வீய குலுணின்
   துரலய் அனுவணின்
   ........................... ...................

   ஆகிய வரிகள் புத்தர் பெருமானுக்குரிய எத்தகைய பண்பைக் குறிப்பிடுகிறது?

   (1) சம்மாசம்புத்த (2) சுகத (3) லோகவிது (4) புத்த (5) பகவா

10. புத்தர் பெருமான் தர்ம தொடர்பாடலில் பல்வேறு நுட்ப முறைகளைப் பின்பற்றினார் என்பது புத்தரின் வாழ்க்கையிலிருந்து வெளிப்படுகிறது. இதற்கேற்ப ராகுலோவாத, கசீபாரத்வாஜ ஆகிய சூத்திரங்களில் வெளிப்படுத்தப்படுவது புத்தர்பெருமான் .................. பயன்படுத்தினார் என்பதாகும்.
    (1) உபமானுசாரி போதனை முறை (2) நேரடிப் போதனை முறை (3) வினாவிடை முறை
    (4) ஒப்படை முறை (5) கலந்துரையாடல் முறை

11. புத்தர் பெருமானின் நடத்தையில் வெளிப்படுத்தப்படும் தனித்துவமான பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
    A - கேசபுத்த எனும் சிறு கிராமத்துவாசிகளான காலாமயன்மார்களுக்கு விமர்சனரீதியாகத் தீர்மானங்களை எடுப்பதற்குப் போதித்தல்
    B - கோபம் கொண்டவர்களுடன் இருக்கும்போது கோபமின்றி இருப்பதும் ஆசாபாசங்களால் நோய்வாய்ப்பட்டவர்களிடையே சுகமாக இருத்தலும்
    C - பல்வேறு நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட அவமானங்கள், துஷ்பிரயோகங்களுக்கு மத்தியில் சலனமற்று அமைதியாக இருத்தல்
    D - தன்னைப் பற்றியதாக இருப்பினும் ஆராய்ந்து பார்த்த பின்னர் ஏற்றுக்கொள்வதற்கு வழிகாட்டுதல்
    E - கடுமையான சட்டதிட்டங்களினால் தனது சீடர்களைக் கட்டுப்படுத்த முயற்சி செய்யாமை

    மேலே தரப்பட்டுள்ள விடயங்களில் புத்தர் பெருமான் சிந்தனை சுதந்திரத்திற்கு மதிப்பளித்ததை வெளிப்படுத்தும் கூற்றுகள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.

    (1) A, B ஆகியன மாத்திரம் (2) A, C ஆகியன மாத்திரம் (3) A, D ஆகியன மாத்திரம்
    (4) A, E ஆகியன மாத்திரம் (5) B, C ஆகியன மாத்திரம்

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



12. "நவீன விஞ்ஞானரீதியிலான சிந்தனைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய சமயமாக இருப்பது பௌத்தம் ஆகும்." இக்கூற்றினை வெளிப்படுத்தியவர் யார்?
(1) எட்வின் ஆர்னோல்ட் (2) அல்பேர்ட் ஐன்ஸ்டீன் (3) பேர்டினன்ட் ரஸல்
(4) லஷ்மி நரசு (5) மக்ஸ் முல்லர்

13. புத்தர் காலத்தின் சீடர்கள் தொடர்பான கூற்றுகள் சில கீழே தரப்படுள்ளன.
A - சூகரகத குகையில் 'தீகநக' சந்நியாசிக்குப் போதித்த வேதனா பரிக்கக சூத்திராயவைக் கேட்டு அருகதர் நிலை அடைந்தார்.
B - புத்தர் பெருமானின் வலது பக்க சீடர் பதவியைப் பெற்றார்.
C - புத்தர் பெருமானின் இடது பக்க சீடர் பதவியைப் பெற்றார்.
D - பிக்குணி சாசனத்தைத் தாபிப்பதில் முன்னோடியாகச் செயற்பட்டார்.
E - ஸ்ரீசத்தர்மயவை நன்றாக நினைவில் வைத்திருந்ததனால் தர்மசேனாதிபதி பதவியைப் பெற்றார்.
மேலே தரப்பட்டுள்ள கூற்றுகளில் சாரிபுத்திர மகாதேரரின் நடத்தை தொடர்பிலான தகவல்களை மாத்திரம் உள்ளடக்கிய கூற்றுகள் எவை?
(1) A, B, D (2) A, B, E (3) A, C, E (4) B, D, E (5) C, D, E

14. சமூகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய பௌத்த பகுப்பாய்வு குறிப்பிடும் தீக நிகாயாவின் அக்கஞ்ஞ சூத்திரத்தில் வரும் விவரிப்புக்கு ஏற்ப சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) வயல்களைப் பராமரிப்பது வைசிய வம்சத்தவர்களின் பொறுப்பு ஆகும்.
(2) நூல்களைக் கற்பதற்கு விரும்பியவர்கள் காடுகளில் வாழ்க்கை நடத்தினர்.
(3) பல்வேறு கைத்தொழில்களில் ஈடுபட்டவர்கள் க்ஷத்திரியர் எனப்பட்டனர்.
(4) பாவங்களை அழிக்கும் நோக்குடன் காட்டில் வாழ்ந்தவர்கள் ஏனையோரையும் பாவங்களிலிருந்து விலகியிருப்பதற்குச் செயற்பட்டனர்.
(5) கீழான நடத்தை உடையவர்கள் சூத்திரர் எனப்பட்டனர்.

15. லோக பாலக தர்ம என்பதால் கருதப்படுவது
(1) அரசியல் யாப்பு
(2) தவறு செய்பவர்களுக்குத் தண்டனை வழங்குதல்
(3) சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
(4) பாவம் செய்வதற்கு வெட்கம், பயம் அடைதல்
(5) குற்றம் இடம்பெறுவதற்கான சந்தர்ப்பங்களைத் தவிர்த்தல்

16. பௌத்த அரசியல் சிந்தனைகளுக்கு ஏற்ப சனநாயக ஆட்சிமுறை நிலவும் அரசு ஒன்றில் பிரஜைகளின் பொறுப்பு என்று **கருதப்படமுடியாதது**
(1) சட்டதிட்டங்களை மீறாது பாதுகாத்தல்
(2) மக்களின் இறைமைக்கு ஏற்ப அரசாட்சியாளர்களை நியமித்தல்
(3) அரச சொத்துக்களைப் பாதுகாத்தல்
(4) உரிய முறையில் அரசுக்கு வரி செலுத்துதல்
(5) போராட்டங்கள் மூலம் நேர்மையற்ற ஆட்சியாளர்களைத் துரத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்

17. பௌத்த அரசியல் கோட்பாடு உள்ளடங்கிய முக்கிய மூலாதாரமான கூட்டதந்த சூத்ராகத போதனைகளுக்கு **உரித்தல்லாத** ஆட்சிக் கொள்கை
(1) நாட்டில் பொருளாதார செழிப்பை ஏற்படுத்துதல்
(2) குற்றங்கள் ஏற்படுவதற்கு இடமளிக்காதிருத்தல்
(3) வறுமையை ஒழிப்பதற்கு நடவடிக்கையை எடுத்தல்
(4) மூத்தோர்களுக்கு மரியாதை செலுத்துதல்
(5) அரச சேவையைப் பலப்படுத்துதல்

18. மனிதர்களுக்குத் தமது வாழ்க்கையை நடத்திச் செல்வதற்குப் போதிய செல்வம் இல்லாதிருப்பது சமூகப் பிரச்சினைகள் உருவாகுவதற்கு உதவுவதாக பௌத்தம் எடுத்துக்காட்டுகிறது. இதற்கேற்ப சக்கவத்திசீஹநாத சூத்ராகத கற்பித்தல்களுக்கமைய வறுமையை அடிப்படையாகக் கொண்டு படிப்படியாக ஏற்படும் பல்வேறு குற்றங்களுக்கு உரியது **அல்லாத** விடயம் உள்ளடங்கிய விடையைத் தெரிவுசெய்க.
(1) களவு எடுக்கத் தூண்டப்படுதல்
(2) சூது விளையாடத் தூண்டப்படுதல்
(3) பொய் கூறுவதற்குத் தூண்டப்படுதல்
(4) இம்சைப்படுத்தத் தூண்டப்படுதல்
(5) போர் ஆயுதங்களை உபயோகிக்கத் தூண்டப்படுதல்

[பக். 4 ஐப் பார்க்க

19. செல்வத்தின் நுகர்வு பற்றிய ஐந்து கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
    A - தனது சொந்த நலனுக்காக செல்வத்தைப் பயன்படுத்துதல் வேண்டும்.
    B - நண்பர்களின் நலனுக்காக செல்வத்தைப் பயன்படுத்துதல் வேண்டும்.
    C - மனைவி, பிள்ளைகளின் நலனுக்காக செல்வத்தைப் பயன்படுத்துதல் வேண்டும்.
    D - தாய், தந்தையரின் நலனுக்காக செல்வத்தைப் பயன்படுத்துதல் வேண்டும்.
    E - வேலையாளர்கள், தொழிலாளர்களின் நலனுக்காக செல்வத்தைப் பயன்படுத்துதல் வேண்டும்.

    செல்வத்தின் நுகர்வு பற்றிய பௌத்த போதனைகளுக்கு ஏற்ப மேலே தரப்பட்டுள்ள கூற்றுகளில் சரியானது/சரியானவை
    (1) A மாத்திரம். (2) A, B ஆகியன மாத்திரம். (3) A, B, C ஆகியன மாத்திரம்.
    (4) A, B, C, D ஆகியன மாத்திரம். (5) A, B, C, D, E ஆகிய அனைத்தும்.

20. தனிநபர் செல்வத்தைச் சம்பாதித்தல், நுகர்தல் பற்றிய அறிவுரைகளை பௌத்த மதம் வழங்குகிறது. செல்வத்தைப் பயன்படுத்தும்போது தனக்கு மட்டும் பயன்படுத்துவதை அனுமதிக்காததுடன், அது முழு சமூகத்துக்கிடையிலும் பகிரப்படும் விதத்தில் பயன்படுத்தப்பட வேண்டும் என்று கற்பிக்கின்றது. இந்தக் கற்பித்தல்கள் உள்ளடங்கிய பொருளாதாரக் கோட்பாடு இனங்காணப்படுவது
    (1) பஞ்சபலி எனவாகும்.
    (2) பரித்தியாகம் எனவாகும்.
    (3) சத்தர சங்கிரஹவஸ்து எனவாகும்.
    (4) சமஜிவிக்கதா எனவாகும்.
    (5) தானம் எனவாகும்.

21. “இந்த தர்மத்தைப் பூரணப்படுத்தி நிறைவேற்றியதால் துன்பமே அல்லாது எந்தவொரு நன்மையும் பெறவில்லை. என்றோ ஒரு நாள் நீங்கள் உணர்ந்தால் அவற்றை அழித்து விட வேண்டும்.” இத்தகைய கூற்றுக்களினால் குறிப்பிடப்படுவது,
    (1) பாவங்களை அழிப்பது பற்றிய போதனை
    (2) துன்பத்தை நீக்குதல் பற்றிய உபதேசம்
    (3) நல்லது கெட்டது பற்றிய நியதி
    (4) அத்துபனாயிக தர்மம் பற்றிய நியதி
    (5) சில் அனுட்டிக்க வேண்டிய விதம் பற்றிய அறிவுறுத்தல்

22. பேராசை, வெறுப்பு, ஏமாற்றம் (லோப, தோஷ, மோக) என்னும் மனோபாவங்களை அடிப்படையாகக்கொண்டு தனிநபரினால் செய்யப்படும் அகுசல் தர்மம் ‘தச அகுசல’ என்ற பெயரால் பௌத்த இலக்கியங்களில் குறிப்பிடப்படும். அவற்றில் மனதை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் அகுசல் தர்மத்தை ஒழுங்கு முறையில் குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க.
    (1) மிருகங்களைக் கொல்லுதல், பொய் கூறுதல், அதிக பேராசை
    (2) களவெடுத்தல், பாலியல் துர்நடத்தை, அதிகளவு கோபம்
    (3) அதிகளவு கோபம், நியாயமில்லாத பேராசை, தவறான பார்வை
    (4) பொய் கூறுதல், அதிகளவு கோபம், களவெடுத்தல்
    (5) அதிக பேராசை, அதிகளவு கோபம், தவறான பார்வை

23. பெருமளவிலான சுகபோகங்களை எதிர்பார்க்காது குறைந்தளவு நுகர்வில் திருப்தியாக செயற்படுதல் பௌத்தத்தில் .................. என இனங்காணப்படுகிறது.
    (1) சுபரதா (2) அல்பேச்சதா (3) அல்ப கிருத்தியதா
    (4) சந்துட்டிதா (5) அத்திரிச்ஜதா

24. மனிதனால் மேற்கொள்ளப்படும் சூழல் அழிவு நவீன உலகில் உள்ள அனைவரையும் துன்பத்துக்கு உள்ளாக்கும் கடுமையான சமூகப் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையைக் குறைப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய கற்பித்தல்கள் பல பௌத்த இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கேற்ப பிக்குமார் வாழ்க்கைக்கும் சூழல் பாதுகாப்பிற்கும் இடையிலான தொடர்பை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாக .................. என்பதை எடுத்துக்காட்ட முடியும்.
    (1) ஆராமைகள் அமைத்தல்
    (2) காடாக்கல்
    (3) தெருக்கள் அமைத்தல்
    (4) குளங்கள், கிணறுகள் கட்டுதல்
    (5) சூழலை அழிக்கும் எந்தவொரு செயலிலும் ஈடுபடாதிருத்தல்

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**25.** பற்றுகளை நீக்கிய தேரர்கள் அழகியலை இரசனை செய்த முறையினை தேர - தேரீகாதா உறுதிப்படுத்துகிறது. இவ்வாறு அஜகரணி நதிக்கரையை தியானம் செய்யத் தெரிவுசெய்து அதன் அழகினை அனுபவித்தவர்

(1) வண. சப்பக்க மகாதேரர் (2) வண. வனவச்ச மகாதேரர் (3) வண. காலுதாயி மகாதேரர்
(4) வண. கோதிக மகாதேரர் (5) வண. தாலபுட மகாதேரர்

**26.** அறநெறியில் செல்வத்தை சம்பாதிக்கும் வழியாக விலங்கு வேளாண்மை, வியாபாரம், விவசாயம், அரச சேவை, பல்வேறு நுட்பக்கலைக் கைத்தொழில்களில் ஈடுபடுதல் ஆகிய தொழில்கள் பௌத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் 'மானகூட' என்னும் ஏமாற்ற செயலினால் செல்வத்தை சம்பாதிக்கக்கூடாது என்பதில் கவனம் செலுத்தப்பட்டிருப்பது

(1) அரச சேவையில் ஆகும்.
(2) விவசாயத்தில் ஆகும்.
(3) வியாபாரத்தில் ஆகும்.
(4) விலங்கு வேளாண்மையில் ஆகும்.
(5) பல்வேறு நுட்பக்கலைக் கைத்தொழில்களில் ஈடுபடுதலில் ஆகும்.

**27.** "வெற்றிகரமான இல்லற வாழ்க்கையை நடாத்தும் ஒருவர் செல்வத்தை சம்பாதித்து அதனை உரிய விதத்தில் கையாளுவதினால் வசதியான வாழ்க்கையைக் கொண்டிருக்க முடியும்" என்று பௌத்தம் பரிந்துரைக்கின்றது. தான் சம்பாதித்த செல்வத்தை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து, பாதுகாத்து நுகருதல் வேண்டும். இதற்கமைய வருமானத்தை விட செலவு அதிகரிக்காது சமநிலையில் நுகரப்பட வேண்டும் என்பது இனங்காணப்படுவது

(1) பஞ்சபலி எனவாகும். (2) அஜத்துமாரிக எனவாகும். (3) உதும்பரகாதக எனவாகும்.
(4) சமஜீவிகதா எனவாகும். (5) ஆரக்கசம்பதா எனவாகும்.

**28.** மனிதன் மகிழ்ச்சியை விரும்பும் உயிரினம் என்று கருதும் பௌத்தம் லௌகிகமானதும், அலௌகிகமானதுமான பல மகிழ்ச்சிகள் உள்ளன எனப் போதிக்கின்றது. இவற்றில் "பற்றற்றிருப்பதிலான மகிழ்ச்சி" இனங்காணப்படுவது

(1) சாமிச சுக எனவாகும். (2) நிராமிச சுக எனவாகும். (3) காம சுக எனவாகும்.
(4) நெக்கம்ம சுக எனவாகும். (5) அனவஜ்ஜ சுக எனவாகும்.

**29.** இல்லறத்தானின் மகனான சிகாலவுக்கு உபதேசிக்கப்பட்ட சிகாலோவாத சூத்திரத்தில் வரும் ஆறு திசைகளை வணங்குவதில் எடுத்துக்காட்டப்படும் சில கடமைகளும் பொறுப்புகளும் கீழே தரப்பட்டுள்ளன.

A - நன்கு ஒழுக்கமாக்குதல்
B - மூத்தோரைக் கண்டதும் இருக்கையிலிருந்து எழுந்திருத்தல்
C - பாவங்களைத் தவிர்த்தல்
D - நன்மைதரும் செயற்பாடுகளில் ஈடுபடுதல்
E - அவமதிப்பு செய்யாதிருத்தல்

மேலே தரப்பட்டவற்றில் தெற்கு திசையை பிரதிநிதித்துவப்படுத்தும் குரு - சீடன் கடமைகள் உள்ளடங்கிய விடையைத் தெரிவுசெய்க.

(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, C ஆகியன மாத்திரம் (3) A, D ஆகியன மாத்திரம்
(4) B, D ஆகியன மாத்திரம் (5) B, E ஆகியன மாத்திரம்

**30.** தனிநபர் சம்பாதிக்கும் செல்வம் அழிவடைவதற்குக் காரணமான ஆறு விடயங்கள் சிகாலோவாத சூத்திரத்தில் உள்ள அபாயமுகவில் விவரிக்கப்பட்டுள்ளது. அங்கு "சமஜ்ஜாபிசரண" என்பதால் கருதப்படுவது

(1) சூதாட்டத்தில் ஈடுபடுதல்
(2) தேவையில்லாத நேரங்களில் வீதிகளில் பயணம் செய்தல்
(3) தீய நண்பர்களுடன் சகவாசம்
(4) போதை தரும் பானங்களை அருந்துதல்
(5) இசை, நடனம்சார் மேடைக் காட்சிகளில் ஈடுபடுதல்

**31.** இல்லற சமூகத்தின் நன்மைக்காக மங்கல சூத்திரத்தில் கற்பிக்கப்பட்ட விடயங்களில் ஒரு குடும்பத்தின் அன்றாட நல்வாழ்வுக்கு உரியதாக எடுத்துக்கொள்ளக் கூடிய கற்பித்தல் **அல்லாதது**

(1) அசேவனா ச பாலானம் (2) மாதா பிது உபத்தானம் (3) ஞாதகானம் ச சங்ஹோ
(4) மஜ்ஜபானா ச சஞ்ஞமோ (5) நிப்பாண சச்ஜிகிரியா

[பக். 6 ஐப் பார்க்க

32. அசரித்வா பிரம்மச்சரியம்
அலத்தா யொப்பனே தனம்
ஜிண்ண கொஞ்சாவ ஜாயன்தி
கீண மச்சேவ பல்லலே
இந்த தம்மபத காதாவில் காட்டப்பட்டுள்ளவாறு நீர் வற்றிய, மீன்கள் இல்லாத குளம் ஒன்றைக் கவலையுடன் பார்த்துக்கொண்டிருந்த வயதான கழுகுக்கு சமமாவது
(1) இளமைக்காலத்தில் பிரம்மச்சாரியம் பேணாத, செல்வம் பெறாத, கவலையுடனான வயதான இல்லறத்தான்.
(2) பிள்ளைகளின் அன்பும் பராமரிப்பும் பெறாத கவலைப்படும் முதுமையான பெற்றோர்.
(3) பிரமச்சாரியம் பேணாது முதுமையடைந்து கவலைப்படும் இல்லறத்தான்.
(4) சத்தர அகதியின் காரணமாக உரிய விதத்தில் பொதுமக்கள் சேவை செய்யாத ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்.
(5) குடிபோதைக்கு அடிமையாகி செல்வத்தை வீண் செலவு செய்த நபர்கள்.

33. பராபவ சூத்திரத்துக்கு அமைய கீழே தரப்பட்டுள்ள காரணங்களில் தனிநபரின் வீழ்ச்சிக்கு காரணம் **அல்லாத** விடயம் உள்ளடங்கிய தெரிவு எது?
(1) சோம்பேறித்தனத்துடன் செயற்படுதல்
(2) தனக்கு உரிய செல்வத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளல்
(3) வயதான பெற்றோர்களைப் பராமரிக்காதிருத்தல்
(4) தீய மனிதப் பண்புகளை விரும்புதல்
(5) தற்பெருமையினால் தனது சொந்த உறவினர்களுக்குக் குறைவாக மதிப்பளித்தல்

34. தனது சீடர்களை தர்மதூது சேவையில் ஈடுபடுத்திய புத்தர் பெருமான், தானும் தர்மதூது சேவையில் ஈடுபட்டு யதாவாதி ததாகாரி புத்தர் குணத்தை வெளிப்படுத்தினார். அத்தகைய சந்தர்ப்பமொன்று புத்தர் பெருமானின் ...................... விஜயத்தில் உறுதியாகின்றது.
(1) கபிலவஸ்து நகரம் (2) உருவெல (3) அலவி நகரம்
(4) கோசிங்க வனம் (5) பாரிலேய வனம்

35. தேரவாத பௌத்த மகாநாடுகளை நடத்துவது பற்றிய முன்னுதாரணங்கள் புத்தர் பெருமான் வாழ்ந்த காலத்திலேயே வழங்கப்பட்டதாக சான்றுகளைக் காணக்கூடியதாகவுள்ளது. இதற்கேற்ப இந்த விடயங்கள் அடங்கிய மூலாதாரம்
(1) சுல்லவக்கபாளி (2) மகாபரிநிப்பாண சூத்திரம் (3) பாஸாதிக சூத்திரம்
(4) சமந்தபாஸாதிகா (5) மகாவம்சம்

36. தேரவாத பௌத்த மகாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட சில தீர்மானங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - சன்ன தேரருக்கு பிரம்ம தண்டனை விதித்தல்
B - விதிக்கப்பட்ட தண்டனை மாற்றப்படாது நடைமுறைப்படுத்த தீர்மானித்தல்
C - உப்பாஹிகாவின் மூலம் தோன்றிய பிரச்சினைகள் தீர்க்கப்படல்
D - செயற்படாதிருந்த வினய கர்மாவை மீண்டும் ஆரம்பித்தல்
E - தர்மத்தைத் தங்கத் தகடுகளில் எழுதி வைத்தல்
மேலுள்ள கூற்றுகளில் முதலாவது பௌத்த மகாநாட்டின் விளைவுகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.
(1) A, B (2) A, C (3) B, D (4) C, E (5) D, E

37. இரண்டாம் பௌத்த மகாநாட்டுக்கு முக்கிய காரணியான வஜ்ஜிபுத்தக பிக்குமார் முன்வைத்த தஸ வஸ்துக்களில் சில பின்வருமாறு
A - சிங்கிலோண கப்ப B - த்வங்குல கப்ப
C - காமாந்தர கப்ப D - அமதித கப்ப
E - ஜலோகி கப்ப
இவ்விடயங்களில் உணவு, பானம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட விடயம்/விடயங்கள்
(1) A மாத்திரம்.
(2) A, B ஆகியன மாத்திரம்.
(3) A, B, C ஆகியன மாத்திரம்.
(4) A, B, C, D ஆகியன மாத்திரம்.
(5) A, B, C, D, E ஆகிய அனைத்தும்.

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**38.** அசோக மன்னன் போரின் மூலம் நாடுகளை வெற்றி கொள்ளும் கொள்கைகளைக் கைவிட்டு, தர்ம வழியை மேற்கொண்டான் என்பது அவனால் தாபிக்கப்பட்ட கல்வெட்டுகளினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய அசோகனின் தர்ம விஜயக் கொள்கை பற்றிக் குறிப்பிடும் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) மனிதப் படுகொலை காரணமாகத் தான் அதிக கவலை அடைந்ததாக 13 ஆவது பாறைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.
(2) தர்ம மகாமாத்துறுமார் அனுப்பப்பட்ட பிரதேசங்கள் பற்றி கால்சி பாறைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.
(3) திக் விஜயத்தினால் விரக்தியடைந்த தான் தர்ம விஜயத்தினால் உலகை வெற்றி கொண்டதாக கால்சி பாறைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.
(4) ஏனைய சமயங்களுக்கு வசதிகள் வழங்கி சமயப் பொறைக் கொள்கையைப் பின்பற்றியதாக சாஞ்சி, சாரநாத் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.
(5) பிரிவுபட்டிருந்த பிக்குமாரை ஒற்றுமைப்படுத்தி சாசனத்தைத் தூய்மைப்படுத்தியதாக பாராபர் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

**39.** போர்வீரனான அசோக மன்னன் தான் செய்த பெரும் மனிதப் படுகொலை பற்றி விரக்தியடைந்திருந்தவேளை நிகிரோதசாமனேரியைக் கண்டு பௌத்த சமயத்தைத் தழுவி, தர்ம அசோகனாகி பௌத்தத்தின் பரம்பலுக்கு மேற்கொண்ட முக்கிய பணி

(1) சாசனத்திலிருந்து சமயபேதமுள்ள துறவிகளை வெளியேற்றுதல் ஆகும்.
(2) சீலமுள்ள துறவிகளை ஒன்றிணைத்தல் ஆகும்.
(3) தூண் கல்வெட்டு, பாறைக் கல்வெட்டு சுவர்க் கல்வெட்டு என்பவற்றின் மூலம் அசோக தர்மத்தைப் பரப்புதல் ஆகும்.
(4) ஒன்பது நாடுகளுக்கு பௌத்த சமயத்தைப் பரப்புதல் ஆகும்.
(5) மொக்கலிபுத்ததிஸ்ஸ மகாதேரரைக் கொண்டு கதாவத்துப்பகரணயவை எழுதுவித்தல் ஆகும்.

**40.** பௌத்த சாசனத்தின் தொடர்ச்சி மற்றும் பரம்பலுக்காக நடவடிக்கை மேற்கொண்ட இந்திய மன்னர்களில் கனிஷ்க மன்னனால் மேற்கொள்ளப்பட்ட சாசனத்துக்கான சேவை

(1) புத்தர் பெருமான் பல்வேறு இடங்களில் போதித்த தர்ம, வினய என்பவற்றை சேகரித்து பிடகமாக தொகுப்பதற்குப் பங்களிப்புச் செய்தமை
(2) வினயவிற்கு எதிரான பிக்குகளின் ஏற்றுக்கொள்ளப்படாத விதிகளை ஆராய்ந்து நிராகரித்து பிக்குகள் வினயவை மீளுருவாக்குவதில் ஆதரவு வழங்கியமை
(3) பல நிகாயக்களாகப் பிரிவுபட்டிருந்த பிக்குகளை ஒற்றுமைப்படுத்தி தேரவாத மரபினுள் ஒன்றிணைத்தமை
(4) மகத இராச்சியத்தை மையமாகக் கொண்டு வெளிநாடுகளுக்கு தர்மதூதுப்பணியாளரை அனுப்பியமை
(5) புத்த தர்மத்தை சமஸ்கிருத மொழியில் ஓதி விபாஷா அட்டகதாவைத் தொகுப்பதற்கு பங்களிப்புச் செய்தமை

**41.** இந்தியாவில் காணப்பட்ட புகழ்பெற்ற பௌத்த பல்கலைக்கழகங்கள் பற்றிய சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - வண. தீபங்கர ஸ்ரீ ஞான மகாதேரர் இந்தப் பல்கலைக்கழகத்தின் வேந்தராகப் பதவி வகித்தார்.
B - இந்தப் பல்கலைக்கழகத்தைக் கட்டியெழுப்புவதற்கு முன்னோடியாக இருந்தவர் தர்மபால மன்னன் ஆவார்.
C - வித்தியாகிருக என்ற பெயரில் குறிப்பிடப்பட்ட ஆறு திசைகளிலும் வாசல்கள் கொண்ட பிரம்மாண்டமான போதனை மண்டபத்துடன் கட்டிடங்கள் கட்டப்பட்டன.
D - இந்தப் பல்கலைக்கழகத்தில் சம்மிதீய நிகாய போதனைகள் முக்கிய இடம் பெற்றன.
E - இந்தப் பல்கலைக்கழகம் ஹீனயான கல்வி மத்திய நிலையமாக வளர்ச்சியடைந்தது.

இங்கு விக்கிரமசீலா பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய சரியான கூற்று/கூற்றுகள்

(1) A மாத்திரம். (2) A, B ஆகியன மாத்திரம். (3) A, B, C ஆகியன மாத்திரம்.
(4) A, B, C, D ஆகியன மாத்திரம். (5) A, B, C, D, E ஆகிய அனைத்தும்.

**42.** பௌத்தத்திற்கு முந்திய இலங்கையில் வழிபாடு செய்யப்பட்ட தெய்வங்களிடையே ஆலமரம், பனைமரம் என்பவற்றைத் தமது இருப்பிடமாகக் கொண்டவர்கள் என்று நம்பப்பட்டவர்கள்

(1) புரதேவ, கம்மாரதேவ (2) விரூட, விருபாக்ச (3) ஜுதின்தர, பச்ஜிமராஜினீ
(4) வைசிரவண, வியாததேவ (5) கம்மாரதேவ, சுமன

**43.** லக்திப மன்னர்கள் பௌத்தர்களாக மட்டுமன்றி போதிசத்துவருமாக இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டது

(1) துட்டகைமுனு மன்னனால் ஆகும்.
(2) சத்தாதிஸ்ஸ மன்னனால் ஆகும்.
(3) தேவநம்பிய தீச மன்னனால் ஆகும்.
(4) IV ம் மிகிந்து மன்னனால் ஆகும்.
(5) மகாசேனன் மன்னனால் ஆகும்.

[பக். 8 ஐப் பார்க்க

**44.** பின்வரும் விகாராராமவற்றினுள் அனுராதபுர மகா விகாரைக்குச் சொந்தமான இணைப்பு நிறுவகம் எது?
(1) வீரங்குராராமய (2) தக்கிணகிரி (3) அசோகாராமய
(4) உத்தராராமய (5) குத்தவங்க பிரிவேனா

**45.** பிறப்பிலிருந்து இறப்புவரை அனைத்து முக்கிய சந்தர்ப்பங்களிலும் உரிய பாரம்பரிய முறைகளை நிறைவேற்றுதல் இலங்கையின் சிங்கள பௌத்த மக்கள் சமூகத்தின் முக்கிய பண்பாகும். அதற்கமைய மனித வாழ்க்கையின் ஆரம்ப காலப் பகுதியில் செய்யப்படும் சில சம்பிரதாயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - தாய்ப்பால் மறக்க வைத்தல்
B - பெயர் வைத்தல்
C - கல்வி நிலையத்திடம் ஒப்படைத்தல்
D - அரங்கேற்றம்
E - ஏடு தொடக்குதல்
மேலே தரப்பட்டுள்ள விடயங்களில் சம்பிரதாயங்கள் மேற்கொள்ளப்படும் ஒழுங்குமுறையை உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.
(1) A, B, D, E, C (2) B, C, D, E, A (3) B, D, A, E, C (4) B, D, C, A, E (5) D, A, B, E, C

**46.** கி. பி. 6 ஆம் நூற்றாண்டில் சீனாவுக்கு வருகை தந்த போதிதர்ம பிக்கு அந்நாட்டில் பரப்பிய பௌத்த மரபு எனக் கருதப்படக் கூடியது
(1) தியென் தய் மரபு (2) சன்ரொன் மரபு (3) நிச்ரென் மரபு
(4) ஜோஜித்சு மரபு (5) ஹொஸ்ஸோ மரபு

**47.** புத்தர் சிலைகளை நிருமாணிப்பதற்கு முன்னர் புத்தர் பெருமானுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்ட குறியீடு **அல்லாதது**
(1) போதி (2) தூபி (3) பாதச்சுவடு (4) ஆசன (5) தர்ம சக்கரம்

**48.** இந்தியாவில் புத்த சிலைகளை நிர்மாணிக்கும் மரபுகள் சிலவற்றைக் காணக்கூடியதாக இருப்பதுடன் காந்தார, மதுரா மரபுகள் இவற்றுள் பிரசித்தி பெற்றவை. கீழே தரப்பட்டுள்ளவை அந்த இரண்டு மரபுகளுக்கும் உரிய சில பண்புகள் ஆகும்.
A - சாக்கியசிங்க நிலையைக் காட்டும்
B - சுருண்டிருக்கும் கேசம்
C - மகாகருணை நிலையைக் காட்டும்
D - சரீரத்துக்கு அண்மையில் கைகள் நெருக்கமாக இருக்கும்
E - கண்கள் பாதிமூடியிருக்கும், உதடுகள் மெல்லியதாயிருக்கும்
மேலுள்ள பண்புகளில் மதுரா மரபுக்கு உரிய புத்தர் சிலைப் பண்புகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.
(1) A, B (2) A, C (3) B, C (4) C, D (5) D, E

**49.** தம்பதெனியா காலத்தில் பல உரைநடை, கவிதை இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. இவற்றில் சமகாலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற கவிதை இலக்கிய நூல்
(1) சத்தர்மரத்னாவலி (2) கவ்சிலுமின (3) பூஜாவலி
(4) தூபவம்சம் (5) புத்சரண

**50.** இலங்கையில் நாடகம் மரபு தேசிய கலாசாரம் சார்ந்ததாக விருத்தியடைந்துள்ளது. அந்தவகையில் இலங்கையின் புகழ்வாய்ந்த சில நாடகங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - சந்தகிந்துரு நாடகம்
B - விதுர நாடகம்
C - ஹேமமாலி நாடகம்
D - மனமே நாடகம்
E - வெஸ்ஸந்தர நாடகம்
மேலுள்ள நாடகங்களில் ஜாதகக் கதையை கருப்பொருளாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நாடகம்/நாடகங்கள் அடங்கிய விடையைத் தெரிவுசெய்க.
(1) A மாத்திரம்
(2) A, B ஆகியன மாத்திரம்
(3) A, B, C ஆகியன மாத்திரம்
(4) A, B, D, E ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D, E ஆகிய அனைத்தும்

***

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

බෞද්ධ ශිෂ්ටාචාරය II
பௌத்த நாகரிகம் II
Buddhist Civilization II

45 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ ஒவ்வொரு வினாவுக்கும் **20** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

## பகுதி I

**1.** (i) பிராமணக் கற்பித்தல்களில் குறிப்பிடப்படும் நான்கு வருணங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) கிருகஸ்த ஆச்சிரமத்துக்குரிய **மூன்று** கருமங்களை எடுத்துக்காட்டுக. (03 புள்ளிகள்)

(iii) புத்தர் காலத்தில் பெண்களுக்கு சமய சுதந்திரம் கிடைத்திருந்தது என்பதை **நான்கு** காரணிகள் மூலம் உறுதிப்படுத்துக. (04 புள்ளிகள்)

(iv) நிகண்டநாதபுத்தர் முன்வைத்த கர்ம கோட்பாட்டை சுருக்கமாக அறிமுகப்படுத்துக. (05 புள்ளிகள்)

(v) பகுட கச்சாயனாவின் கற்பித்தல்கள் மூலம் சமூக நல்லொழுக்கத்துக்கு ஏற்படும் **தீங்கான** செல்வாக்கினை விளக்குக. (06 புள்ளிகள்)

**2.** (i) புத்தர் காலத்தில் இந்திய சமூகத்தில் விவசாயப் பொருளாதார முறை நிலவியதென்பதற்கு **நான்கு** காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) புத்தர் காலத்தில் இந்தியாவில் நிலவிய குடியாட்சி முறையின் **மூன்று** தனித்துவமான பண்புகளை எடுத்துக்காட்டுக. (03 புள்ளிகள்)

(iii) புத்தர் பெருமான் தர்ம தொடர்பாடலுக்கென பல்வேறு முறைகளைப் பயன்படுத்தினார் என்பதை **நான்கு** காரணிகளைக் கொண்டு விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) புத்தர் பெருமான் உரித்தாகக் கொண்டிருந்த புரிசதம்மசாரதி குணத்தை **மூன்று** சந்தர்ப்பங்கள் கொண்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(v) தர்ம சேனாபதி சரியுத் மகாதேரரின் **நான்கு** நடத்தைப் பண்புகளை மதிப்பிடுக. (06 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

3. (i) "அக்கோடேன ஜினே கோடங்" என்ற தம்மபத காதாவை சரியாகப் பூரணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ii) மேலே 3(i) இல் குறிப்பிட்ட காதாவின் கருத்தை எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) சிகாலோவாத சூத்திரத்துக்கு அமைய எசமானர்கள் - சேவகர்கள் கடமைகளும் பொறுப்புகளும் **பத்தின்** பெயர்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) சமூகத் தோற்றம் பற்றிய பௌத்த பகுப்பாய்வை அக்கஞ்ஞ சூத்திரத்தினை எடுத்துக்காட்டி விளக்குக. (05 புள்ளிகள்)

(v) புத்தர் காலத்தில் தர்ம தூது சேவையின் வெற்றிக்கு பிக்குமார்களினால் நிறைவேற்றப்பட்ட பங்களிப்பை உதாரணங்கள் காட்டி கலந்துரையாடுக. (06 புள்ளிகள்)

## பகுதி II

4. (i) மக்கள் விரும்பும் ஆட்சி முறையினைக் கட்டியெழுப்புவதற்கு தச சக்விதிவலவின் பொருத்தப்பாட்டினை கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

(ii) "சம்பாதிக்கும் செல்வத்தைத் தமது முன்னேற்றத்துக்கு மாத்திரம் பயன்படுத்துவதை பௌத்தசமயம் அனுமதிப்பதில்லை." பௌத்த நுகர்வு சிந்தனையைக் கொண்டு பகுப்பாய்வு செய்க. (10 புள்ளிகள்)

5. (i) நவீன சமூகத்தில் நிலவும் அதர்மமான வியாபார தந்திரோபாயங்களைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய பௌத்த கற்பித்தல்களை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) நவீன குடும்பக் கூட்டமைப்பில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மங்கல சூத்திரத்தில் உள்ள கற்பித்தல்களிலிருந்து பெறக்கூடிய உதவிகளை விளக்குக. (10 புள்ளிகள்)

6. (i) முதல் பௌத்த மகாநாட்டை நடத்துவதில் செல்வாக்கு செலுத்திய காரணங்களை எடுத்துக்காட்டி, அதன் பலனாக தர்மவினய பாதுகாக்கப்பட்ட விதத்தினை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) பௌத்தத்தின் விருத்திக்கு புராதன இலங்கை ஆட்சியாளர்கள் நிறைவேற்றிய பணியை அனுராதபுர காலத்தின் இரண்டு அரசர்களின் சாசன சேவை கொண்டு மதிப்பிடுக. (10 புள்ளிகள்)

7. (i) பாரம்பரிய தாய்லாந்து கலாசாரத்தின் செழுமைக்கு பௌத்த சமயத்தினால் கிடைத்த ஒளியை உதாரணங்கள் கொண்டு முன்வைக்குக. (10 புள்ளிகள்)

(ii) தனிநபரின் பிறப்பு முதல் இறப்பு வரை நிகழ்த்தப்படும் சம்பிரதாய முறைகளில் பௌத்த முன்மாதிரி பெறப்பட்ட விதத்தினைப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

8. (i) இலங்கையின் தூபிக் கட்டிடக்கலையின் ஆரம்பம், பரவல் என்பன பற்றி விமர்சனரீதியாக விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) பின்வரும் தலைப்புகளில் **இரண்டினைப்** போதுமான அளவில் விவரிக்குக.

1) சூத்திர வர்ணத்தவர்
2) சதர அகதி
3) அபயகிரி
4) சந்திரவட்டக்கல்

(5 × 2 = 10 புள்ளிகள்)

* * *


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

LOL Book Store

# 25% OFF ALL BOOKS

**Including Exercise Books, CR Books, and B5 Books**




**ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්**

**ORDER BOOKS FROM LOL BOOKS STORE**

0372060110 **WWW.LOL.LK**

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**


ORDER GCE A/L
SHORT NOTES, MODEL,
REVISION BOOKS & PAST
PAPERS IN SINHALA, ENGLISH
& TAMIL MEDIUM
LOL
BOOK
STORE
CASH ON DELIVERY
AND KOKO PAYMENT
AVAILABLE
WHATSAPP - 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls
WITH LOL BOOK STORE!